## நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சத்தியமங்கலம்

**முன்னிலை: திரு. P. ரஞ்சித்குமார், பி.ஏ., பி.எல்.,**
**நீதித்துறை நடுவர்,**
**சத்தியமங்கலம்.**

**2057 திருவள்ளுவராண்டு ஸ்ரீவிசுவாவசு வருடம் மாசி மாதம் 27ம் நாள்**
**2026ம் வருடம் மார்ச் மாதம் 11 ஆம் நாள் புதன்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 45/2022**

**CNR. No.TNED07-004591-2022**

அரசுக்காக
காவல் துறை உதவி ஆய்வாளர்,
சத்தியமங்கலம் காவல் நிலையம்,
குற்ற எண். 277/2022. ..... குற்றமுறையிடுபவர்

/எதிர்/

சுரேஷ் (வயது 34/2022),
த/பெ.ராஜு (எ) ராஜ்
க.எண். 60ஏ, பெருமாள் கோவில் வீதி,
பெரியூர்,
அரியப்பம்பாளையம்,
சத்தியமங்கலம். ....எதிரி

**Particulars Under Rule 106 of Criminal Rules of Practice 2019**

| | |
|---|---|
| Name of the Police Station and Cr No. | Sathyamangalam Police Station, Cr.No. 277/2022 |
| Accused Name | Suresh |
| Father / Husband Name | S/o. Raju @ Raj |
| Occupation | Driver |
| Address | D.No.60-A, Perumal Koil Street, Periyur, Ariyappampalayam, Sathyamangalam |

| | |
|---|---|
| Age | 34/2022 |
| Occurrence | 25.04.2022 |
| Complainant | 26.04.2022 |
| Apprehension | Nil |
| Released on Bail | Anticipatory Bail granted by the Hon'ble Vacation Sessions Judge, Erode in Crl.MP.No.1325/2022 dt.04.05.2022 |
| Commitment | Not Applicable |
| Commencement of trial | 10.03.2026 |
| Closure of trial | 10.03.2026 |
| Sentence or order | Acqittal |
| Service of Copy of Judgment an accused | Nil |
| Explanation of delay | Delayed by both side |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தால் கடந்த 16.12.2022ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசுக்காக அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் ஆஜராகியும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.தங்கராஜன்,எம்.காம்.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும் இவ்வழக்கு சாட்சிகள், சான்றாவணங்கள், இரு தரப்பு வாதங்கள் ஆகியவற்றை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

**<u>தீர்ப்புரை</u>**

1. இவ்வழக்கானது சத்தியமங்கலம் காவல் நிலைய குற்ற எண்.277/2022 இ.த.ச.பிரிவுகள் 294(b), 324, 506(2) ன் கீழ் எதிரியின் மீது தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கையின் அடிப்படையில் இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

2. <u>அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்</u>

கடந்த 24.04.2022 ம் தேதி காவல் நிலைய சரகம் பெரியூர் புதுவலவு காமராஜர் நகரில் உள்ள சாட்சியும் தன் மாமியாருமான சகுந்தலா என்பவர் வீட்டிற்க்கு தன் குடும்பத்தினருடன் வந்திருந்த புகார்தாரர் 25.04.2022ம் தேதி அதிகாலை 02.00 மணிக்கு தண்ணீர் குடிப்பதற்காக எழுந்த போது தான் இருந்த வீட்டிற்க்கு முன்னால் யாரோ சத்தம் போடுவதை கேட்டு தன் அருகில் படுத்திருந்த சாட்சியும் தன் மனைவியுமான திவ்யா என்பவரை எழுப்பி தகவல் சொல்லி இருவரும் செல்போன் லைட்டை போட்டு வீட்டிற்க்குள் இருந்து வெளியே வந்து பார்த்த போது வீட்டிற்க்கு முன்னால் பொது இடத்தில் நின்று கொண்டிருந்த எதிரி சுரேஷ் என்பவர் புகார்தாரரை பார்த்து "வாடா தாயோழி" கண்டாரோலி மகனே "என்னோடு வாழாத என் மனைவியுடன் நீ எப்படிடா வாழலாம் என்று பொது மக்கள் அறுவருக்க தக்க கெட்ட வார்த்தையால் திட்டி பொது இடத்தில் புகார்தாரருக்கு அவமானத்தை ஏற்படுத்தியும், பக்கத்தில் கிடந்த மர ரீப்பர் கட்டையை எடுத்து புகார்தாரரை அடிக்கும் போது புகார்தாரர் அதை தடுக்க முயன்ற போது புகார்தாரரின் கழுத்தின் கீழ்பக்கம்பட்டு புகார்தாரருக்கு சாதரண காயத்தை ஏற்படுத்தியும், மேலும் புகார்தாரரைப் பார்த்து எப்ப இருந்தாலும் உன் சாவு என் கையால் தான் என்று கொலை மிரட்டல் செய்துள்ளார் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

3. இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தால் சி.சி.எண்: 45/2022 ஆக பிடிகட்டளை கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜரான எதிரிக்கு வழக்கு ஆவணங்களின் நகல்களை கு.வி.மு.ச பிரிவு 207 –ன் படி இலவசமாக வழங்கி ஆலோசனை செய்ய அவகாசம் கொடுக்கப்பட்டு, எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 324, 506(2) ன் கீழான குற்றச்சாட்டுகள் வனைந்து அதனை பற்றி எதிரிக்கு விளக்கி வினவியபோது எதிரி பொய் வழக்கு குற்றவாளி இல்லை என மறுத்து பதிலளித்தும், தனக்கு எதிரான குற்ற முகாந்திரங்களையும் மறுத்துரைத்ததால் எதிரி மீதான வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. இவ்வழக்கில் அரசுத் தரப்பில், இவ்வழக்கின் எதிரி கு.வி.மு.ச பிரிவு 320ன் கீழ் சமாதான மனு தாக்கல் செய்து இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்துள்ளதால் இவ்வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.4 ஆகிய சாட்சிகள் மட்டும் விசாரிக்கப்பட்டுள்ளனர். இவ்வழக்கின் அரசு தரப்பில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்றுப்பொருள் அ.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5.<u>அரசுத்தரப்பு சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு</u>

இவ்வழக்கின் அ.சா.1 பிரகாஷ் என்பவர் தன்னுடைய முதல்நிலை சாட்சியத்தில் தான் தற்போது அன்னூரில் வசித்துக்கொண்டு டிரைவராக வேலை செய்து வருவதாகவும், பட்டியல் சாட்சி 2 தனது மனைவி என்றும், எதிரியைத் தெரியும் என்றும், சுமார் 4 ஆண்டுகளுக்கு முன் ஒருநாள் தானும், தன் மனைவியும் தனது மாமியார் வீட்டிலிருந்தபோது அதிகாலை 02.00 மணி சுமாருக்கு வீட்டிற்கு வெளியே சத்தம் கேட்கிறது என்று தான் வந்து பார்த்தபோது 4,5 நபர்கள் வீட்டிற்கு வெளியே வேகமாக ஓடினார்கள் என்றும், அதில் ஒருவர் தன் மீது மோதியதில் தான் கீழே விழுந்துவிட்டதாகவும், அதில் தனக்கு அடிபட்டது என்றும், தான் சத்தியமங்கலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்று மீண்டும் சத்தியமங்கலம் விஸ்வநாதன் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்ததாகவும், அங்கு உள்நோயாளியாக இருக்கும்போது போலீசார் வந்து தன்னை விசாரித்து எழுதிக்கொண்டார்கள் என்றும், அதில் என்ன எழுதியுள்ளது என்று தனக்குத் தெரியாது என்றும், அதிலுள்ள கையெழுத்து அ,சா.ஆ.1 தன்னுடையதுதான் என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. மேலும் அ.சா.2 திவ்யா என்பவர் தன்னுடைய முதல்நிலை சாட்சியத்தில் நான் தற்போது அன்னூரில் வசித்துக்கொண்டு இல்லத்தரசியாக உள்ளதாகவும், அ.சா.1 தனது கணவர் என்றும், எதிரியைத் தெரியும் என்றும், சுமார் 4 ஆண்டுகளுக்கு முன் ஒருநாள்

தானும், தன் கணவரும் தனது அம்மா வீட்டிலிருந்தபோது அதிகாலை 02.00 மணி சுமாருக்கு வீட்டிற்கு வெளியே சத்தம் கேட்கிறது என்று தானும், தனது கணவரும் வந்து பார்த்தபோது 4, 5 நபர்கள் வீட்டிற்கு வெளியே வேகமாக ஓடினார்கள் என்றும், அதில் ஒருவர் தன் கணவர் மீது மோதியதில் தான் கீழே விழுந்துவிட்டதாகவும், அதில் தன் கணவருக்கு அடிபட்டது என்றும், தன் கணவர் சத்தியமங்கலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்று மீண்டும் சத்தியமங்கலம் விஸ்வநாதன் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தார் என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7. மேலும் அ.சா.3 ஆனந்தகுமார் என்பவர் தன்னுடைய முதல்நிலை சாட்சியத்தில் நான் தற்போது பவானிசாகர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 26.04.2022–ம் தேதி தான் சத்தியமங்கலம் காவல் நிலைய தலைமைக் காவலராகப் நிலையப் பொறுப்பிலிருந்தபோது சத்தியங்கலம் விஸ்வநாதன் மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவல் அ.சா.ஆ.2 ஐ பெற்று அங்கு உள்நோயாளியாக இருந்த பிரகாஷ் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3 ஐ பெற்று நிலையம் வந்து சத்தியமங்கலம் காவல் நிலைய குற்ற எண்.277/2022 இ.த.ச பிரிவுகள் 294(பி),324,506(2)–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஐ பதிவு செய்ததாகவும், பின்னர் முதல் தகவல் அறிக்கையுடன் புகார் வாக்குமூலத்தின் அசலை இணைத்து சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், ஒரு நகலை புலன் விசாரணைக்காக காவல் உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். காவல் உதவி ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

8. மேலும் அ.சா.4 சிவக்குமார் என்பவர் தன்னுடைய முதல்நிலை சாட்சியத்தில் நான் தற்போது சத்தியமங்கலம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், இந்த வழக்கில் புலன் விசாரணை மேற்கொண்டு இறுதி அறிக்கைத் தாக்கல் செய்த காவல் உதவி ஆய்வாளர் குட்டியண்ணன் என்பவர் பணி ஒய்வு பெற்றுவிட்டதால் வழக்குக் கோப்புகளின் அடிப்படையில் சாட்சியமளிப்பதாக கூறி

கடந்த 26.04.2022–ம் தேதி தலைமைக் காவலர் ஆனந்தகுமார் என்பவர் சத்தியமங்கலம் காவல் நிலைய குற்ற எண்.277/2022 இ.த.ச. பிரிவுகள் 294(பி), 324, 506(2)–ன் கீழ் வழக்குப் பதிவு செய்த வழக்கினை மேல் புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் குட்டியண்ணன் பார்வைக்கு வைக்க அவர் பெற்று 26.04.2022–ம் தேதி மாலை 15.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மாரையன், அன்னாதுரை ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு அ.சா.ஆ.5 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றார் என்றும், பின்னர் அதே தேதியன்று அதே சாட்சிகள் முன்னிலையில் மாலை 16.45 மணிக்கு சம்பவ இடத்திலிருந்து அ.சா.பொ.1 சுமார் 60 செ.மீ நீளமுள்ள மர ரீப்பர் கட்டை ஒன்றை கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.7 மூலமாக கைப்பற்றினார் என்றும், பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 8–யைத் தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எதிரியைத் தேடி வந்த நிலையில் எதிரி ஈரோடு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன் பிணை பெற்று பிணையில் சென்றார் என்றும், பின்னர் அ.சா.1க்கு சிகிச்சையளித்த Peevee மருத்துவமனை மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் அ.சா.ஆ.8 ஐ பெற்றுள்ளார். பின்னர் கைப்பற்றிய சொத்துக்குப் படிவம் 91 அ.சா.ஆ.9 தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார் என்றும், பின்னர் முதல் தகவல் அறிக்கைப் பதிவு செய்த தலைமைக் காவலரை விசாரித்தார் என்றும், பின்னர் தனது புலன் விசாரணையை முடித்து எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள் 294(பி), 324, 506(2)–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கைத் தாக்கல் செய்தார் என்பது அரசு தரப்பு சாட்சியங்களின் சாட்சியமாகும்.

9. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(பி)ன் கீழ் வினவியபோது எதிரி பொய் சாட்சி என்று மறுத்து கூறி தன்னுடைய தரப்பில் சாட்சிகள் இல்லை என தெரிவித்தார். எதிரி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருள் குறியீடு செய்யப்படவில்லை.

10. அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட அ.சா.1 பிரகாஷ் மற்றும் அ.சா.2 திவ்யா ஆகியோர்கள் அரசு தரப்பிற்கு எதிராக பிறழ்சாட்சிகளாக மாறியுள்ளார்கள் என்றும், மேலும் இவ்வழக்கின் எதிரியும் புகார்தாரரும் சமரசமாக சென்றுவிட்டதாக எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 320 ன் கீழ் மனுத்தாக்கல் செய்து இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கின் புகார்தாரரும் எதிரியும் சமரசம் ஆகிவிட்டார்கள் என்றும், அதன் காரணமாக பிற சாட்சிகளை விசாரித்து பயனில்லை என்பதால் இவ்வழக்கின் பிற சாட்சிகள் அனைவரும் அரசு தரப்பில் Dispense செய்யப்பட்டுள்ளார்கள் என்றும், அரசு தரப்பில் அ.சா.3ஆனந்தகுமார் மற்றும் அ.சா.4 சிவக்குமார் ஆகியோர்கள் பதவி நிலை சாட்சிகள் ஆவார்கள். ஆகவே இந்நீதிமன்றம் சட்டப்பிரகாரம் தீர்ப்பு வழங்கும் படி வாதம் செய்யப்பட்டது. எதிரி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் பாதிக்கப்பட்ட சாட்சியான அ.சா.1 பிரகாஷ் மற்றும் அ.சா.2 திவ்யா ஆகியோர்கள் இவ்வழக்கில் பிறழ்சாட்சியாகளாக மாறியுள்ளார்கள் என்றும், ஆகவே இவ்வழக்கின் எதிரியை தண்டிக்க இயலாது என்றும், ஆகவே இவ்வழக்கின் எதிரியை விடுதலை செய்யவேண்டும் என்று வாதிட்டார்.

11. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் என்னவென்றால் அரசு தரப்பில் எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 324, 506(2) ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை எவ்வித ஐயப்பட்டிற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

<u>12.தீர்வு</u>

இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 பிரகாஷ் தன்னுடைய புகார்வாக்குமூலத்தில்

**நேற்று 25.04.2022ம் தேதி எனது மாமனார் கடந்த 03 மாதங்களுக்கு முன் இறந்து விட்டார். அதனால் எனது மாமியாரை பார்க்க கோவையில் இருந்து மனைவி மற்றும் குழந்தையுடன் பெரியூர் புதுவலவு மாமனார் வீட்டில் இருந்த போது இரவு சுமார் 02.00 மணியளவில் தண்ணீர் குடிக்க எழுந்து வரும் போது யாரோ வெளியில் சத்தம் போட்டு கொண்டிருப்பதை வெளியில் வந்து பார்த்த போது சுரேஷ் என்பவர் என் மாமனார் வீட்டு வாசல் முன்பு என்னோடு**

**வாழாத என் மனைவியுடன் நீ எப்படிடா வாழலாம் என்று சொல்லிக்கொண்டு வாடா தாயோலி கண்டாரோலி பையனே உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி கொன்று கீழே கிடந்த மர ரீப்பர் கட்டையால் என் நெஞ்சில் அடிக்கும் போது அதை தடுக்க முயன்ற போது தவறி கழுத்தில் பட்டதில் எனக்கு சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. இந்த சத்தத்தை கேட்டு என் மனைவி திவ்யா மாமியார் சகுந்தலா பாட்டி ரங்கம்மாள் ஆகியோர் ஓடி வந்த போது சுரேஷ் மர ரீப்பர் கட்டையை அங்கேயே பேட்டுவிட்ட எப்ப இருந்தாலும் உன் சாவு என் கையில் தாண்டா என சொல்லி அங்கிருந்து சென்றுவிட்டான்** என்று கூறியுள்ளார்.

13. ஆனால் புகார்தாரர் அ.சா.1 பிரகாஷ் தன்னுடைய முதல்நிலை சாட்சியத்தில்

**1. நான் தற்போது அன்னூரில் வசித்துக்கொண்டு டிரைவராக வேலை செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி 2 எனது மனைவி. எதிரியைத் தெரியும். சுமார் 4 ஆண்டுகளுக்கு முன் ஒருநாள் நானும், என் மனைவியும் எனது மாமியார் வீட்டிலிருந்தபோது அதிகாலை 02.00 மணி சுமாருக்கு வீட்டிற்கு வெளியே சத்தம் கேட்கிறது என்று நான் வந்து பார்த்தபோது 4,5 நபர்கள் வீட்டிற்கு வெளியே வேகமாக ஓடினார்கள். அதில் ஒருவர் என்மீது மோதியதில் நான் கீழே விழுந்துவிட்டேன். அதில் எனக்கு அடிபட்டது.**

**2. நான் சத்தியமங்கலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்று மீண்டும் சத்தியமங்கலம் விஸ்வநாதன் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தேன். அங்கு உள்நோயாளியாக இருக்கும்போது போலீசார் வந்து என்னை விசாரித்து எழுதிக்கொண்டார்கள். அதில் என்ன எழுதியுள்ளது என்று எனக்குத் தெரியாது. அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்தக் கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.**என்று சாட்சியம் அளித்துள்ளார்.

14. ஆகவே இவ்வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட புகார்தாரர் அ.சா.1 பிரகாஷ் தன்னுடைய புகார்வாக்குமூலம் அ.சா.ஆ.3 ல் கூறியுள்ள விபரங்களுக்கு எதிராக மாற்றி சாட்சியம் அளித்துள்ளார். மேலும் இவ்வழக்கின் அரசு தரப்பில் இவ்வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்ததாக விசாரிக்கப்பட்ட அ.சா.2 திவ்யா என்பவர் அரசு தரப்பிற்கு எதிராக பிறழ்சாட்சியாக மாறியுள்ளார். மேலும் இவ்வழக்கில் கூறியுள்ள சம்பவங்களை நிருபணம் செய்யும் வகையில் அரசு தரப்பில் எவ்விதமான சாட்சிகளையும் விசாரணை செய்யவில்லை. மேலும் இவ்வழக்கின் எதிரி தரப்பில் பாதிக்கப்பட்ட சாட்சியான அ.சா.1

பிரகாஷ் என்பவர் இவ்வழக்கின் எதிரியுடன் சமரசம் ஆகிவிட்டதாக கு.வி.மு.ச பிரிவு 320ன் கீழ் இந்நீதிமன்றத்தில் MP,No.3/2026 மனுதாக்கல் செய்து மேற்படி மனுவினை இந்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. ஆகவே இவ்வழக்கின் புகார்தாரரும் எதிரியும் இவ்வழக்கு பிரச்சனை சம்மந்தமாக ஏற்கனவே சமரசம் ஆகிவிட்டது தெரியவருகிறது. இவ்வழக்கின் சத்தியமங்கலம் காவல் நிலைய தலைமைக்காவலர் அ.சா.3 ஆனந்தகுமார் மற்றும் தற்போதைய சத்தியமங்கலம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அ.சா.4 சிவக்குமார் ஆகியோர்களுடைய சாட்சியம் மற்றும் அவர்கள் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்களை வைத்து கொண்டு இவ்வழக்கின் எதிரி இவ்வழக்கில் கூறியுள்ள குற்றத்தை புரிந்ததாக எடுத்துக்கொள்ள இயலாது. காரணம் அ.சா.3 மற்றும் அ.சா.4 ஆனவர்கள் பதவி நிலை சாட்சிகள் ஆவார்கள். ஆகவே இவ்வழக்கின் அரசு தரப்பில் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை எவ்வித ஐயப்பட்டிற்கும் இடமின்றி நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

15. ஆகவே, இவ்வழக்கின் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் எவ்விதமான ஐயப்பட்டிற்கும் இடமின்றி நிரூபணம் செய்யாத காரணத்தினால் இவ்வழக்கின் எதிரியை விடுதலை செய்வது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

16. முடிவாக, எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.பிரிவுகள் 294(b), 324, 506(2) ன் கீழான குற்றச்சாட்டை எவ்விதமான ஐயப்பட்டிற்கும் இடமின்றி நிரூபணம் செய்யாத காரணத்தினால் இவ்வழக்கின் எதிரியை குற்றவாளி அல்ல என முடிவு செய்து இவ்வழக்கின் எதிரியை கு.வி.மு.ச. 248(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

17. இவ்வழக்கிற்காக எதிரியால் இயற்றி கொடுக்கப்பட்ட பிணைமுறி பத்திரம் மேல்முறையீடு காலத்திற்கு பிறகு மேல்முறையீடு இல்லையெனில் தானாகவே ரத்து ஆகிவிடும்.

18. இவ்வழக்கில் அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள அ..சா.பொ.1 ஆன சுமார் 60 செ.மீ நீளமுள்ள மர ரீப்பர் கட்டை ஒன்று பி.ஆர்.எண். 192/2022 ன் கீழ் இந்நீதிமன்ற பாதுகாவலில் இருந்து வருகிறது. மேற்படி பொருள் உதவாத பொருள் என்பதால் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு மேல்முறையீடு இல்லையெனில் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு 20256 ஆண்டு மார்ச் மாதம் 11 ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RANJITHKUMAR Digitally signed by RANJITHKUMAR Date: 2026.03.11 18:12:10 +0530

நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.

**<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | 10.03.2026 | திரு. பிரகாஷ் (புகார்தாரர்) |
| அ.சா.2 | 10.03.2026 | திருமதி. திவ்யா |
| அ.சா.3 | 10.03.2026 | திரு. ஆனந்தகுமார் (காவல் துறை தலைமைக் காவலர்) |
| அ.சா.4 | 10.03.2026 | திரு. சிவக்குமார் (காவல் துறை உதவி ஆய்வாளர்) |

**<u>அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1/அ.சா.1 | 26.04.2022 | புகார்வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1 பிரகாஷ் என்பவரின் கையெழுத்து |
| அ.சா.ஆ.2/அ.சா.3 | 25.04.2022 | தகவல் குறிப்பு |
| அ.சா.ஆ.3/அ.சா.3 | 26.04.2022 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.4/அ.சா.3 | 26.04.2022 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5/அ.சா.4 | 26.04.2022 | பார்வை மகஜர் |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.6/அ.சா.4 | 26.04.2022 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.7/அ.சா.4 | 26.04.2022 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.8/அ.சா.4 | 26.04.2022 | காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.9/அ.சா.4 | 26.04.2022 | படிவம் 91 |

**அரசு தரப்பு சான்று பொருட்கள்:–**

| | | |
|---|---|---|
| அ.சா.பொ.1/அ.சா.4 | – | சுமார் 60 செ.மீ நீளமுள்ள மர ரீப்பர் கட்டை ஒன்று |

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்:–** இல்லை

**எதிரி தரப்பு சான்று பொருட்கள் :–** இல்லை

RANJITHKUMAR Digitally signed by RANJITHKUMAR Date: 2026.03.11 18:12:25 +0530

நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.

**குறிப்பு.**

1) வழக்கு விசாரணையின்போது எதிரி ஜாமினில் இருந்தார்.

2)எந்த ஒரு சாட்சியையும் விசாரணைக்காக மூன்று வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3) வழக்கு முடிவு இரு தரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT AT SATHYAMANGALAM

## CASE SUMMARY

### CC.NO.45/2022

| Period of Remand of accused | The date of filling of the complaint/ final Report in the court | The date of committal of the case to the court of sessions | The date of questioning of the accused U/s.228, 240, 246 and 251 of the code of criminal procedure the case maybe | Filling of all miscellaneous petition and the result including the result on challange before superior court except routine petitions like petitions U/s. 317 of the code | Date of examination in chief and cross examination of the witness | | | Date of examination of the accused U/s. 313 of the code | Date of upsconder of accused and his appearance/production as the case maybe | Grand of stay by superior court and the results thereof |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Pws/ Dws | Chief | Cross | | | |
| Nil | 16.12.2022 | Nil | 11.06.2024 | CMP.No.948/2022 MP .No. 2/2026 both petitions allowed MP.No.3/2026 petition dismissed | Pw1 | 10.03.2026 | - | 11.03.2026 | - | - |
| | | | | | Pw2 | 10.03.2026 | - | | | |
| | | | | | Pw3 | 10.03.2026 | 10.03.2026 | | | |
| | | | | | Pw4 | 10.03.2026 | 10.03.2026 | | | |

RANJITHKUMAR Digitally signed by RANJITHKUMAR Date: 2026.03.11 18:12:32 +0530

Judicial Magistrate,
Sathyamangalam